

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து ஆசூர் ஊராட்சியில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன். எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தனர். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி எம் ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, நகர கழக செயலாளர் குண்டாமணி(எ) என்.செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் ஞான. இமயநாதன் கு.வைத்தியநாதன், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, அமிர்த. விஜயகுமார், ப.முருகமணி, பஞ்சு.குமார், மாவட்ட கழக பொருளாளர் கண்ணகிபன்னீர், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் வின்சென்ட் மற்றும் பலர் உள்ளனர்.

### ஈரோடு தகவல் தொழில் நுட்ப அணி சார்பில்

# உதவும் கரங்கள் இல்லத்தில் அறுசுவை உணவு!

## கே.பார்த்திபன் ஏற்பாட்டில் மு. சுப்பிரமணியம் வழங்கினார்!

ஈரோடு, ஜூலை 10-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சரும் கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் முனைவர் கே.பார்த்திபன் ஏற்பாட்டில் செயற்குழு உறுப்பினர் என்.கொண்டசாமி தலைமையில் ஈரோடு வெண்டிய பாளையம் உதவும் கரங்கள் இல்லத்தில் காலை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம் மாவட்ட நிர்வாகிகள் செல்ல பொன்னி, ப.க.பழனிசாமி, டி.எஸ். குமாரசாமி, மகாலிங்கம், ஆர்.பொன்னுசாமி கழக மாணவரணி மாநில துணை செயலாளர் வீரமணிஃ மாவட்ட அமைப்பாளர்கள் மகளிரணி திலகவதி இலக்கிய அணி ப.இளைய கோபால் ஈரோடு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தண்டபாணி, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் கிரீன்பார்க் வெங்கடேஸ்வரன், வட்டச் செயலாளர் பாலமுகுந்தன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் அலாவுதீன், செந்தில்குமார், தகவல் தொடர்பான தொகுதி பொறுப்பாளர்கள் சந்தோஷ், மகேந்திரன் ரகுபதி, பஞ்சு, அரவிந்தன், சாந்தி, யுவராகுல், உள்ளிட்ட பலர் உள்ளனர்.



பொள்ளாச்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தி.மு.க. நகர கழக செயலாளர் பொள்ளாச்சி முன்னாள் நகர மன்ற தலைவர் உள்ளிட்ட தி.மு.க. பல்வேறு பொறுப்புகளில் கழகம் வளர பாடுபட்ட ராஜு அவர்களின் 10ம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது அவருடைய திருவுருவப்படத்திற்கு மாநில விவசாய அணி துணை தலைவர் தமிழ்மணி மலர் தூவி மரியாதை செலுத்தினார் இதில் பொள்ளாச்சி நகர மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், நகர கழக அவை தலைவர் அழகப்பன், பொருளாளர் ஆகிமூர்த்தி, துணை செயலாளர் நாச்சிமுத்து, நகர மன்ற உறுப்பினர்கள் பெருமாள், உமா மகேஸ்வரி, விஜயகுமார்,அசோக் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சேரன் நகர் சுரேஷ், யூனியன் கவுன்சிலர் ஜோதி வர்த்தக அணி வீரமணி, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் தர்மலிங்கம், முன்னாள் ஒன்றிய செயலாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# தஞ்சை தொகுதியில் முரசொலி எம்.பி. நன்றி தெரிவித்தார்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமை !

திருவாரூர், ஜூலை 10-

தஞ்சாவூர் தொகுதியில் வெற்றிபெற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி தஞ்சை தொகுதிக்கு உட்பட்ட மன்னார்குடியில் வாக்காளப்பெருமக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தலைமையில், கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் தலைமையிலான நல்லாட்சிக்கு பரிசாக இந்தியா கூட்டணி போட்டியிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றிக்கனியை பறித்தது. தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ச.முரசொலி எம்.பி. வாக்களர்களை சந்தித்து நன்றி தெரிவிக்கும் சுற்றுப்பயணம் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்த கத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் மன்னார்குடி நகர பகுதிகளில் நடைபெற்றது .

நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு மன்னார்குடி நகரம் தேரடி நேதாஜிசிலை அருகே திருமஞ்சன வீதியில் தொடங்கிய இந்த நன்றி அறிவிப்பு சுற்றுப்பயணம் இரவு பழைய தஞ்சாவூர் ரஸ்தா காமாட்சி அம்மன் தெரு, இடத்தெரு, செல்லகாமாட்சி அம்மன் கோயில் தேரு பகுதிகளில் நிறைவடைந்தது.

இந்த சுற்றுப்பயணத்தில் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நகர செயலாளர் வீரா.கணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன் மற்றும் நகர கழக நிர்வாகிகள், இந்தியா கூட்டணியின் நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க.வேட்பாளர்

# அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிப்பீர்!

## அமைச்சர் செஞ்சிமஸ்தான் இறுதி கட்ட பிரச்சாரம்!

விக்கிரவாண்டி,ஜூலை 10-

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும் 10ஆம்தேதி நடைபெறுகிறது. இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிவடைந்தது.

இந்நிலையில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் இறுதி கட்ட தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு செ.புதூர், முட்டத்தூர் ஊராட்சி 103, 104. 105 பாகம் எண் கொண்ட வாக்காளர்களை சந்தித்து உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.

வாக்கு சேகரிப்பின் போது பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை அதிக அளவில் செயல்படுத்தி வருகிறார்.

பேருந்தில் கட்டணமில்லா பயணம், மகளிர் உரிமைத்தொகை மாதம் ஆயிரம் ரூபாய், மகளிர் சுய உதவி குழுவிற்கு கடன் தள்ளுபடி அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு கூடுதல் கடன் வசதி, புதுமைப்பெண் திட்டத்தில் உயர் கல்வி படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து . செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி கடன் செலுத்தும் வகையில் விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து சுமார் ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

வாக்கு சேகரிப்பின் போது விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் டாக்டர் சேகர்,விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராணமூர்த்தி, பொருளாளர் கோபாலகிருஷ்ணன்,மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பழனி, வளவனூர் முன்னாள் பேருராட்சி மன்ற தலைவர் சம்பத்,முட்டத்தூர்

ஒன்றிய கவுன்சிலர் முகிலன்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கருணாநிதி,அன்பழகன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி காணை மத்திய ஒன்றியம் கல்யாணம் பூண்டி ஊராட்சியில் சேலம் கிழக்கு மாவட்ட ஆத்தூர் நகர செயலாளர் கே.பாலசுப்பிரமணியன் தலைமையில் இறுதி கட்ட பிரச்சாரத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். அப்போது நரசிங்கபுரம் நகர செயலாளர் வேல்முருகன், நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், நகர பொருளாளர் ராமச்சந்திரன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் பர்கத் அலி, கவுன்சிலர் சம்பத்குமார், செல்வகுமார், கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அறிவிப்புகள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில்

# சுற்றுலாத் துறை அலுவலர்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவுறுத்தல்!

சென்னை, ஜூலை 10 -

2024 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத்துறை அறிவிப்புகள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலாத்துறை அலுவலர்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவுறுத்தியுள்ளார்.



சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் .கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நேற்று (8.7. 2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சுற்று லாத் துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

### 2024 -2025 சுற்றுலாத் துறை அறிவிப்புகள்

1. அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா தேவாலயப்பகுதி, சிவகங்கை மாவட்டம் பிரான்மலை பகுதி, திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி மற்றும் தெற்கு கள்ளிக்குளம் தேவாலயப்பகுதி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை ஆகிய வழிபாட்டு சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் ரூ. 8.10 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

2. திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள புல்லாவெளி அருவி, கொட்டுவரை அருவி மற்றும் கோட்டை நங்காஞ்சியாறு அணைப் பகுதி, மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள குட்லாடம்பட்டி அருவி மற்றும் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள புளியஞ்சோலை அருவி ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த ரூ.10.20 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

3. கடற்கரை மாவட்டங்களான இராமநாதபுரத்தில் உள்ள தொண்டி கடற்கரை, கன்னியாகுமரியில் சங்குதுறை, சொத்தவிளை கடற்கரை பகுதி, சூரிய காட்சி முனை மற்றும் தூத்துக்குடி மாவட்டம். காயல்பட்டினம் கடற்கரை பகுதிகளில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

4. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள அவதானப்பட்டி ஏரிப்பகுதி மேம்பாடு, திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏலகிரி மலையில் அமைந்துள்ள புங்கனூர் ஏரி மற்றும் திருவண்ணா மலை மாவட்டத்தில் தாமரைக்குளம் ஏரியில் படகு குழாம் மற்றும் இதர சுற்றுலாப் பணிகள் ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

5. நீலகிரி மாவட்டத்தில் உல்லாடாவில் கிராமியச் சுற்றுலாவை மேம்படுத்தல், கேத்தி மைனல்லா மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை Hornbill பகுதியில் காட்சிமுனை அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

6. சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த அனுபவங்களை வழங்குதல், கலாச்சாரங்கள், பல்வேறு இயற்கை தலங்கள், பழங்கால மரபுகள் ஆகியவற்றை காட்சிப்படுத்தும் வகையில், பல்வேறு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் விதமாக பெருந்திட்டம் (Master Plan) ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட உள்ளது.

7. மருத்துவம் மற்றும் ஆரோக்கியச் (Medical and Wellness Tourism) சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் கோயம்புத்தூரில் பல்வேறு மருத்துவ தொழில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவச் சுற்றுலா மாநாடு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நடத்தப்பட உள்ளது.

8. தமிழ்நாட்டில் நீர் சாகச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பணிகளுக்கு ரூ.1.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

9. தஞ்சாவூர் மாவட்டம் புதுப்பட்டினம் கடற்கரை மற்றும் சென்னைக்கு அருகில் உள்ள பழவேற்காடு ஏரிப்பகுதி ஆகியவற்றில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக சுற்றுலாப் பெருந்திட்டம் (Master Plan) ரூ.1.00 கோடி செலவில் தயாரிக்கப்படும்.

10. தமிழ்நாட்டில் கிராமியச் சுற்றுலா (Rural Tourism) மற்றும் வான்நோக்கு சுற்றுலா (Astro Tourism) ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Study Report) ரூ. 50 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

11. ஊட்டி, குன்னூர், கொடைக்கானல், ஏற்காடு மற்றும் பிற முக்கிய சுற்றுலா தலங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை தரம் உயர்த்தும் பணிகள் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

12. தமிழ்நாடு சுற்றுலாப் பயணச்சந்தை (Tamil Nadu Travel Mart) ரூ. 1.00 கோடி செலவில் சென்னையில் நடத்தப்படும் என மொத்தம் 12 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகள் விரைவாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சுற்றுலாத்துறை அலுவலர்கள் அனைவரும் விரைந்து பணியாற்ற வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அலுவலர்கள், மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி தொகுதி – சின்னதச்சூர் குளத்துக்காடு பகுதயில் பழங்குடி இருளர் இன மக்களிடம் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.–அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் வாக்கு சேகரித்தனர்.



கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த நாளையொட்டி ஈரோடு மாநகரம் கொல்லம்பாளையம் பகுதி 57,58,59,60 ஆகிய வட்டங்களில் மூலப்பாளையம் ரைஸ்மில் ரோடு, மூலப்பாளையம் பஸ் ஸ்டாப்,மாநகராட்சி பூங்கா அருகில், காந்திபுரம் முருகேஷ் டீக்கடை உள்ளிட்ட இடங்களில் பள்ளி மாணவ–மாணவியருக்கு உபகரணங்களை பகுதி கழக செயலாளர் லட்சுமண குமார் தலைமையில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் வழங்கினார். நிகழ்வில் மு.சுப்பிரமணியம், ஆர்.பொன்னுசாமி, மெடிக்கல் சங்கர், ஆர்.குணசேகரன், டி.மனோகரன், கே.பாலமுகுந்தன், மாமன்ற உறுப்பினர்கள் சக்திவேல், ராமலிங்கம், தண்டபாணி, ஜாகீர் உசேன், ஆர்.பி.பாலு, கிரீன் பார்க் வெங்கடேஸ்வரன், முத்துகுமார், லோகு, சங்கர், அர்ஜுனன், அஜித்குமார், இளம்பொழிலன், கோபால கிருஷ்ணன், சாமியப்பன், பாலகிருஷ்ணன், மோகன், ஜீவா, மூர்த்தி, ஆவின் குணா, சாந்தகுமார், வாசு, பாலாஜி, ஜெயச்சந்திரன், ஆட்டோ எட்வின், சேவியர், சரவணன், சக்திவேல், ஜி.ஹெச்.செல்வம், முருகேஷ், பூமதி, சண்முகம், குணசேகரன், கண்மணி, தர்மன், சரோஜா, அன்னபூரணி, மோகனப்பிரியா, அருண் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தேனி நாடாளுமன்றத் தொகுதியில்

## தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. மக்கள் குறை கேட்டார்

கம்பம், ஜூலை 10-

தேனி தொகுதி தி.மு.க. எம்.பி. தங்க தமிழ்ச்செல்வன் கூடலூர் பைபாஸ் சாலை வழியாக கம்பம் உழவர்சந்தைக்கு சைக்கிளில் சென்றார். பின்னர் அங்கிருந்த அதிகாரிகளிடம் சந்தை குறித்த விபரங்கள் மற்றும் சந்தையில் கடை வைத்துள்ளவர்கள், பொதுமக்களிடம் காய்கறிகள் விலை நிலவரம் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து. கம்பம் சிக்னல் அருகே சென்ற அவர், அங்கு துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், பதவி ஏற்றதும் முதல் பணியாக திண்டுக்கல்லில் இருந்து சபரி மலைக்கு ரயில் பாதை அமைக்கக்கோரி ரயில்வே வாரிய தலைமை நிர்வாக அதிகாரி ஜெயவர்மா சின்காவிடம் கோரிக்கை விடுத்தேன். முதற்கட்டமாக திண்டுக்கல்லில் இருந்து தேனிக்கு ரயில் பாதை அமைக்கப்படும். அதன் பின் சபரிமலை வரை ரயில் பாதையை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தங்கத் தமிழ்ச் செல்வன் எம்.பி. கம்பம் பகுதியில் மக்களிடம் குறை கேட்டார்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. அம்பிகா

**ஜூலை 10 (2017)**



**கம்பம் நகரக் கழகச் செயலாளராக பணியாற்றி வந்த தனது கணவருடன் இணைந்து கழகப் பணியாற்றி வந்த இவர், கழக மகளிர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டு கடலூரில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில், தமது பகுதியில் உள்ள 300க்கும் மேற்பட்ட மகளிர் அணியினரை பங்கேற்கச் செய்தவர்.**

**2006ஆம் ஆண்டு கம்பம் நகர்மன்றத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, கம்பம் நகர கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வர முயற்சி மேற்கொண்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழக அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, பெருந்திரளாக மகளிர் அணியினரை திரட்டி பங்கேற்கச் செய்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**